# விசுவாசம் மற்றும் செயலின் மக்கள்

*இயேசுவின் போதனை “விசுவாசம்” என்று அழைக்கப்படுகின்றது, ஏனெனில் அதைக் கேட்பவர்களிடத்தில் அது விசுவாசத்தை வேண்டுகின்றது. விசுவாசமே நமது செயல்பாடுகளுக்கு நம்மைத் தூண்டும் சக்தியாக உள்ளது. செயல்பாடுகளுக்கு நம்மைத் தூண்டும் நமது விசுவாசத்தின் காரணமாக நமது செயல்பாடுகளுக்குப் பலன் அளிக்கப்படுகின்றது. விசுவாசமற்ற செயல்பாடுகள் மதிப்பற்றவைகளாய் இருக்கின்றன (எபி. 11:6) மற்றும் செயலற்ற விசுவாசமும் மதிப்பற்றதாக உள்ளது (யாக். 2:24). செயல்களை விளைவிப்பதினால் தேவன் பலன் அளிக்கின்றதான அவருக்குப் பிரியமான விசுவாசம் பற்றிய தேவனின் விவரிப்பு எபிரெயர் 11ல் கொடுக்கப்படுகின்றது. பின்வருபவர்களின் விசுவாசமானது அவர்களைச் செயல்படத் தூண்டியதால் அவர்கள் தேவனுக்குப் பிரியமானவர்களானார்கள்:*

*ஆபேல் தம் பலியைச் செலுத்தினார் (வ. 4).*
*ஏனோக்கு தேவனுடன் சஞ்சரிக்கையில் (ஆதி. 5:24) எடுத்துக் கொள்ளப்பட்டார் (வ. 5).*
*நோவா பேழையைத் தயார் செய்தார் (வ. 7).*
*ஆபிரகாம் தேவன் கட்டளைப்படி கீழ்ப்படிந்து புறப்பட்டார் (வ. 8).*
*சாராள் கர்ப்பமானாள் (வ. 11).*
*ஆபிரகாம் ஈசாக்கைப் பலி செலுத்தினார் (வ. 17).*
*யோசேப்பு தம் எலும்புகளைக் குறித்துக் கட்டளை கொடுத்தார் (வ. 22).*
*மோசேயின் பெற்றோர் அவரை ஒளித்து வைத்தனர் (வ. 23).*
*மோசே தாம் வளர்ந்த பொழுது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்றழைக்கப்படுவதை மறுத்தார் (வ. 24).*
*மோசே எகிப்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றார் (வ. 27).*
*மோசே பஸ்காவைக் கடைப்பிடித்தார் (வ. 28).*
*இஸ்ரவேல் மக்கள் கடலினூடே அணிவகுத்துச் சென்றனர் (வ. 29).*
*இஸ்ரவேல் மக்கள் எரிகோவின் மதில்களைச் சுற்றி அணி வகுத்துச் சென்றனர் (வ. 30).*

*இராகாப் ஒற்றர்களை மறைத்து வைத்தாள் (வ. 31).*

*கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்திற்கான இந்த எடுத்துக்காட்டுகள் யாவும், தேவனுடைய வசனத்தைச் சார்ந்து, கீழ்ப்படிதலுடன் செயல்பட நம்மைத் தூண்டுகின்ற விசுவாசத்தையே அவர் ஏற்றுக் கொள்கின்றார் என்பதற்கு ஆதாரமாக உள்ளன. தேவன் தாம் வாக்குத்தத்தம் செய்துள்ளபடி நமக்குப் பலன் அளிப்பார் என்று நாம் விசுவாசிப்பதால் நாம் கீழ்ப்படிகின்றோம். தேவன் நமக்குத் தருகின்ற ஆசீர்வாதங்கள் அவரது செயலின் மூலமாக நிறைவேற்றப்படுகின்றன; அவைகள், நமது விசுவாசத்தின் வெளிப்பாடாக அவர் கேட்டுக் கொள்கின்ற (நமது) செயல்களின் மூலம் சாதிக்கப் படுவதில்லை.*

*ஞானஸ்நானம் அவசியமற்றது என்று போதிக்கும் மக்கள் தங்கள் உபதேசத்திற்குப் பவுலின் எழுத்துக்களிலிருந்து "விசுவாசம் மட்டும்" என்ற உபதேசத்தை அடிப்படையாகக் கொள்கின்றனர். இருப்பினும், இது பவுலின் போதனையைப் புரிந்து கொள்வதில் குறைபாட்டைக் காண்பிக் கின்றது, மற்றும் இது, புதிய ஏற்பாட்டையும் இயேசுவின் வார்த்தை களையும் பவுலுக்கு நேர்மாறானவராக்குகின்றது. பிதாவின் சித்தத்தைச் ''செய்கிறவர்களே'' இராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள் என்று இயேசு போதித்தார் (மத். 7:21). அவர், தேவனுடைய வசனத்தைக் கேட்டு அதன்படி "நடப்பதால்" மட்டுமே மக்கள் ஆசீர்வதிக்கப்படுகின்றனர் என்று உரைத்தார் (லூக். 11:28). மற்றும், அவர் மக்களை, "நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்துக்காகவே கிரியை நடப்பியுங்கள்" (யோவா. 6:27) என்று உற்சாகப்படுத்தினார். யாக்கோபு, "மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறான்" (யாக். 2:24) என்று போதித்தார். "சத்தியத்திற்குக் கீழ்ப்படிதலின்" (1 பேது. 1:22) மூலமாக நமது ஆத்துமாக்கள் சுத்திகரிக்கப்படுவதாகப் பேதுரு போதித்தார். யோவான் "நாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்கிறவர்களானால் அவரை அறிந்திருக்கிறோம் என்பதை அதினால் அறிவோம்" என்றும், "நாம் அவரில் இருக்கிறதை அறிகிறோம்'' (1 யோவா. 2:3-5; 3:24) என்று எழுதினார்.*

*"விசுவாசம் மட்டும்" என்ற கோட்பாடானது (பவுலினால் போதிக்கப் பட்டிருந்தால் அது) அவரையே முரண்பாடுள்ளவராக்குகின்றது, ஏனெனில் அவர், "சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்" (ரோமர் 2:7) என்று எழுதினார். மேலும் அவர், "... உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்தபடியினால் தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்" (ரோமர் 6:17, 18) என்றும், மற்றும் "... பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" (பிலி. 2:12ஆ) என்றும் கூறினார். இயேசு, ''தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்பை அடையக் காரணமானார்" என்று நாம் எபி. 5:9ல் வாசிக்கின்றோம்.*

ஞானஸ்நானம் என்பது தன்னிலேயே பாவத்தை நீக்குகின்ற செயல் அல்ல; மாறாக, அது இயேசுவின் செயலின் மீது கொண்டுள்ள விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த உண்மையானது, இது (ஞானஸ்நானம்) தேவனுடைய செயலின் மீது கொண்ட விசுவாசத்தினால் செயல்படத் தூண்டப்படும் பொழுது அந்த விசுவாசத்தின் பலனைப் பெறுகின்ற ஒரு பதில்செயலாக மட்டும் உள்ளதென்று அர்த்தப்படுகின்றது.